செ.வெ.எண்:27 நாள்:16.02.2018

**சர்வதேச அளவில் உலக திறனாய்வாளர்களைக்கண்டறியும் திட்டம் கல்வி மாவட்ட அளவிலான தடகளப் போட்டிகள் 2017– 2018**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், கரூா மாவட்ட விளையாட்டுப்பிரிவின் சார்பாக, 2017 –2018 ம் ஆண்டிற்கான உலகத் திறனாய்வுத் திட்டத்தின் கீழ் கல்வி மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டி 6, 7 மற்றும் 8 ம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு உடற்திறன் தேர்வுப் போட்டிகள் நடத்தப்பட்டதில் 8, 9 ,10 மதிப்பெண்கள் பெற்று தேர்வு பெற்ற மாணவ/மாணவியர்களுக்கு கல்வி மாவட்ட அளவிலான தடகளப் போட்டிகள் 20.02.2018 அன்று காலை 9.00 மணிக்கு கரூர் மாவட்ட விளையாட்டரங்கத்தில் நடைபெற உள்ளது.

இதுகுறித்த செய்தியினை கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு கு.கோவிந்தராஜ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கையில், போட்டியில் கலந்து கொள்ளளும் மாணவ/ மாணவியர்கள் வயது சான்றிதழை பள்ளித் தலைமையாசிரிடமிருந்து பெற்று வருதல் வேண்டும். வயது சான்றிதழ் இல்லாத மாணவ/மாணவியர்கள் போட்டியில் கலந்து கொள்ள இயலாது. **வயது வரம்பு** (அ) ஆறாம் வகுப்பு மாணவ/மாணவியர்கள் 01.01.2005 அன்றோ அல்லது அதற்கு பின்னரோ பிறந்திருத்தல் வேண்டும். (ஆ) ஏழாம் வகுப்பு மாணவ / மாணவியர்கள் 01.01.2004 அன்றோ அல்லது அதற்கு பின்னரோ பிறந்திருத்தல் வேண்டும். இ) எட்டாம் வகுப்பு மாணவ /மாணவியர்கள் 01.01.2003 அன்றோ அல்லது அதற்கு பின்னரோ பிறந்திருத்தல் வேண்டும்.

தடகளம் விளையாட்டில் மாணவர்கள் மற்றும் மாணவிகளுக்கு 100 மீ, 200 மீ, 400 மீ, குண்டுஎறிதல், உயரம் தாண்டுதல், நீளம் தாண்டுதல் ஆகிய பிரிவுகளில் போட்டிகள் நடைபெறும் முதல் மூன்று இடங்களைப் பெறும் வீரர்/வீராங்கனைகளுக்கு வகுப்பு வாரியாக பரிசு/ சான்றிதழ் வழங்கப்படும்.

போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவ/மாணவியர்கள் போட்டி நடைபெறும் நாள் அன்று காலை 9.00 மணிக்கு போட்டி நடைபெறும் இடத்திற்கு வந்து சேர வேண்டும்.

இப்போட்டிகளை மாணவ/மாணவியர்களுக்கு பயிலும் வகுப்பு வாரியாக கீழ்கண்ட பிரிவுகளில் தனித்தனியாக நடத்தப்படும்.

6– ம் வகுப்பு மாணவர் மற்றும் மாணவியர்
7– ம் வகுப்பு மாணவர் மற்றும் மாணவியர்
8– ம் வகுப்பு மாணவர் மற்றும் மாணவியர்

ஒரு மாணவன் /மாணவி தடகளம் விளையாட்டில் ஏதேனும் இரண்டு போட்டியில் மட்டுமே பங்கு கலந்து கொள்ளலாம்.

**போட்டியில் கலந்து கொள்பவர்கள் சரியாக காலை 9.00 மணிக்குள் போட்டி நடைபெறும் மையத்திற்கு வந்து சேரவேண்டும்.**

எனவே கரூர் மாவட்டத்திலுள்ள அனைத்துப்பள்ளி அரசு மேல்/உயர்/மெட்ரிக் மேல்/உயர்/நடுநிலைப்பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளியில் பயிலும் 6, 7, 8 ம் வகுப்புகளைச் சேர்ந்த மாணவ/மாணவிகளை மேற்கண்ட போட்டியில், அதிக அளவில் கலந்து கொள்ள அனுப்பிவைத்து பயன்பெறுமாறு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு கு.கோவிந்தராஜ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு . செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,கரூர்